# அத்தியாயம் V

# மாநில பொதுத்துறை நிறுவனங்கள்

# அத்தியாயம் V

## மாநில பொதுத்துறை நிறுவனங்கள்

அரசு நிறுவனங்கள், சட்டமுறை கழகங்கள் மற்றும் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள இதர நிறுவனங்களின் (இனி பொதுத்துறை நிறுவனங்கள் என அழைக்கப்படும்) கணக்குகளின்படி, அவற்றின் நிதி செயல்திறன் இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது. 2022-23ம் ஆண்டின் (அல்லது நடப்பாண்டில் இறுதி செய்த அதற்கு முந்தைய ஆண்டுகளின் கணக்குகள்) கணக்குகளின் மீதான இந்திய தணிக்கைத் தலைவரின் கூடுதல் தணிக்கையில் கூறப்பட்டுள்ள கூடுதல் கருத்துகளின் தாக்கம் குறித்தும் இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

### 5.1 அரசு நிறுவனங்களின் வரையறை

அரசு நிறுவனம் என்பது அதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 51 விழுக்காட்டிற்கு குறையாமல், மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது மாநில அரசுகள் அல்லது மத்திய அரசு மற்றும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளோ இணைந்து முதலீடு செய்திருந்தால் அவை அரசு நிறுவனம் என நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 2(45)ன் கீழ் வரையறுக்கப்படுகிறது. மேலும், அரசு நிறுவனத்தின் துணை நிறுவனமும் இதில் அடங்கும்.

மேலும், மற்ற எந்தவொரு நிறுவனமும்[1] மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது மாநில அரசுகள் அல்லது மத்திய அரசு மற்றும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகள் மூலமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, உடைமையானதாகவும் அல்லது கட்டுப்படுத்தினாலும், அவையும் இவ்வறிக்கையின் கீழ் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள இதர நிறுவனங்கள் என்று அழைக்கப்படும்.

### 5.2 தணிக்கையின் உரிமைக்கட்டளை

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143(5) முதல் 143(7) வரையிலான பிரிவுகளின் கீழும், இந்திய தணிக்கைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணி விதிமுறைகள்) சட்டம் 1971ன் பிரிவு 19ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கீழும், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள இதர நிறுவனங்களின் தணிக்கை இந்திய தணிக்கைத் தலைவரால் மேற்கொள்ளப்படுகின்றது. நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ், பட்டயக் கணக்காளர்களை நிறுவனங்களுக்கான சட்டமுறை தணிக்கையாளர்களாக இந்திய தணிக்கைத் தலைவர் நியமித்து, கணக்குகள் தணிக்கை செய்யப்படவேண்டிய வழிமுறைகளையும் வழங்குகிறார். மேலும், கூடுதல் தணிக்கையை மேற்கொள்ளவும் இந்திய தணிக்கைத் தலைவருக்கு உரிமை உண்டு. சட்டமுறைக் கழகங்களை நெறிபடுத்தும் சட்டங்கள் அவற்றின் கணக்குகளை இந்திய தணிக்கைத் தலைவர் மட்டுமே தணிக்கை செய்யவேண்டும் என வழி வகுக்கின்றது.

---

[1] நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட நிறுவனங்கள் (இடர்பாடுகளைக் களைதல்) – 4 செப்டம்பர் 2014 தேதியிட்ட ஏழாவது ஆணை, 2014.

## 5.3 மாநில அரசின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் (GSDP) பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு

மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மக்கள் நலனைக் கருதி வணிக ரீதியான செயல்பாடுகளைப் புரியும் பொருட்டு நிறுவப்பட்டவை. அவை மாநில அளவில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. 31 மார்ச் 2023 நிலவரப்படி, இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கை அதிகார வரம்பின் கீழ் ஒரு சட்டமுறைக் கழகம்[2] உட்பட 102 பொதுத்துறை நிறுவனங்கள் இருந்தன. இவற்றில் இரண்டு[3] நிறுவனங்கள்[4] செயல்படாதவை. இந்த பொதுத்துறை நிறுவனங்களின் பெயர்கள் **இணைப்பு 5.1ல்** தரப்பட்டுள்ளன. செயல்பாடற்ற பொதுத்துறை நிறுவனங்களில் அரசு ₹5.27 கோடி பங்கு மூலதனமாக முதலீடு செய்திருந்தது. சமீபத்திய இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி, தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் நிலுவையில் உள்ள பொறுப்புகள் ₹29.64 கோடியாக இருந்தது மற்றும் தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் தொடர்பான பொறுப்புகள் எதுவும் நிலுவையில் இல்லை என கவனிக்கப்பட்டது. செயல்பாடற்ற பொதுத்துறை நிறுவனங்களின் முதலீடுகள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்காததால் இதில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகிரது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுத்துறை நிறுவனங்களின் விற்பனை வரவு விகிதம், மாநில பொருளாதாரத்தில் அவற்றின் பங்களிப்பை காட்டுகின்றது. 31 மார்ச் 2023 அன்றுடன் முடிவடைந்த மூன்றாண்டு கால கட்டத்திற்கான பொதுத்துறை நிறுவனங்களின் விற்பனைவரவு மற்றும் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் விவரங்கள் **அட்டவனை 5.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 5.1: பொதுத்துறை நிறுவனங்களின் விற்பனை வரவு மற்றும் தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி**

(*₹ கோடியில்*)

| விவரங்கள் | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|
| விற்பனை வரவு | 1,14,334.72 | 1,27,829.39 | 1,67,841.57 |
| தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) | 17,88,074 | 20,71,286 | 23,64,514 |
| தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் விற்பணை வரவின் விழுக்காடு | *6.39* | *6.17* | *7.10* |

(*ஆதாரம்:* பொதுத்துறை நிறுவனங்களின் கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகள்)

மேலே உள்ள அட்டவணையின்படி, பொதுத்துறை நிறுவனங்களின் கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி 2022-23ம் ஆண்டின் விற்பனை வரவு 2020-21ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 46.80 விழுக்காடு

---

2 தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

3 தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் மற்றும் தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்.

4 செயல்படாத நிறுவனங்கள் என்பது கடந்த இரண்டு ஆண்டுகளில் எந்த வணிக அல்லது செயல்பாட்டையும் மேற்கொள்ளாத மற்றும் எந்தவொரு குறிப்பிடத்தக்க கணக்கியல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளாத அல்லது எந்தவொரு நிதிநிலை அறிகைகள் அல்லது ஆண்டு கணக்குகளை தாக்கல் செய்யாத நிறுவனங்களாகும்.

அதிகரித்துள்ளது. இருப்பினும், மாநில உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது.

## 5.4 அரசு நிறுவனங்களில் முதலீடு மற்றும் நிதிநிலை ஆதரவு

### 5.4.1 பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு மூலதனம் மற்றும் கடன்கள்

துறை ரீதியாக 31 மார்ச் 2023ன் இறுதியில் மொத்த பங்கு மூலதனம், மாநில அரசின் பங்கு மூலதனம் மற்றும் நீண்ட கால கடன்கள் கீழே உள்ள **அட்டவணை 5.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.2: பொதுத்துறை நிறுவனங்களில் துறை வாரியான முதலீடு**[5]

**(₹ கோடியில்)**

| துறையின் பெயர் | மொத்த பங்கு மூலதனம் | மாநில அரசின் பங்கு மூலதனம் | மொத்த நீண்ட கால கடன்கள் | மாநில அரசின் கடன்கள் | மொத்த பங்கு மூலதனம் மற்றும் நீண்ட கால கடன்கள் |
|---|---|---|---|---|---|
| மின் சக்தி | 55,075.17 | 29,142.94 | 1,31,723.21 | 4,578.45 | 1,86,798.38 |
| நிதி | 3,621.92 | 3,435.30 | 2,048.42 | 5.04 | 5,670.34 |
| சேவை | 7,086.67 | 7,051.86 | 15,436.57 | 4,352.80 | 22,523.24 |
| அடிப்படை வசதி | 807.63 | 225.74 | 2,976.95 | 392.49 | 3,784.58 |
| மற்றவை | 744.86 | 478.93 | 1,983.78 | 386.11 | 2,728.64 |
| **மொத்தம்** | **67,336.25** | **40,334.77** | **1,54,168.93** | **9,714.89** | **2,21,505.18** |

*(ஆதாரம்: பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட சமீபத்திய ஆண்டு கணக்குகளின்படி)*

பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டின் உந்துதல் முக்கியமாக மின் துறையில் இருந்தது. மின் துறையில் முதலீடு, மொத்த முதலீடான ₹2,21,505.18 கோடியில் 84.33 விழுக்காடாக (₹1,86,798.38 கோடி) இருந்தது.

### 5.4.2 பங்கு விலக்கல், மறுசீரமைத்தல் மற்றும் தனியார்மயமாக்கல்

2022-23ம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனங்களின் தனியார்மயமாக்கல் எதுவும் நடைபெறவில்லை.

### 5.4.3 மின் துறை நிறுவனங்கள்

31 மார்ச் 2023 அன்று மாநிலத்தில் ஐந்து மின்துறை நிறுவனங்கள் உள்ளன. மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நடவடிக்கைகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் (TANGEDCO) மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், விநியோக நடவடிக்கைகள் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் (TANTRANSCO) மேற்கொள்ளப்படுகின்றது. இவை இரண்டும் உடைமை நிறுவனமான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் துணை நிறுவனங்களாகும். உடன்குடி மின்சக்தி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அகியவை பிற இரண்டு மின்துறை நிறுவனங்களாகும். தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் இந்த நிறுவனங்களின் மேம்பாட்டு பணிகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. மாநில அரசு ஆண்டு வரவு–

[5] மூலதனம் பங்கு மூலதனம் மற்றும் நீண்ட கால கடன்களை உள்ளடக்கியது.

செலவு திட்டத்தின் மூலம் மின்துறை நிறுவனங்களுக்கு பல்வேறு வகைகளில் நிதியுதவி அளிக்கின்றது. அரசின் வரவு–செலவு திட்டத்திலிருந்து மார்ச் 2023 அன்றுடன் முடிவடைந்த மூன்று ஆண்டுகளில் மின்துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட பங்கு மூலதனம், கடன்கள் மற்றும் மானியங்கள்/உதவி தொகைகளின் தொகுப்பு விவரங்கள் **அட்டவணை 5.3ல்** தரப்பட்டுள்ளன.:

**அட்டவணை 5.3: வரவு செலவு திட்டதின் மூலம் பொதுத்துறை நிறுவனங்களுக்கு அளித்த உதவிகளின் விவரங்கள்**

(₹ கோடியில்)

| வ. எண் | விவரங்கள் | 2020-21 | | 2021-22 | | 2022-23 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | தொகை | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | தொகை | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | தொகை |
| 1 | பங்கு மூலதனம் | 1 | 437.00 | 3 | 842.39 | 0 | 0.00 |
| 2 | கடன்கள் | 2 | 889.37 | 2 | 2180.44 | 1# | 394.55 |
| 3 | வழங்கப்பட்ட மானியங்கள்/ உதவித் தொகை | 2 | 14,277.55 | 2 | 15,656.29 | 1@ | 26,472.14 |
| 4 | **மொத்தம்** | | **15,603.92** | | **18,679.12** | | **26,866.69** |
| 5 | தள்ளுபடி செய்யப்பட்ட கடன்கள் மற்றும் வட்டிகள் | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 6 | வழங்கப்பட்ட உத்தரவாதம் | 1 | 36,414.31 | 1 | 1,500.00 | 1 | 6,000.00 |
| 7 | நிலுவையில் உள்ள உத்தரவாதம் | 2 | 1,22,949.36 | 2 | 1,39,521.76 | 2 | 1,50,313.19 |

#- தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்

@- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அரசு வழங்கிய உதவித்தொகை மற்றும் மானியங்கள், மின் கட்டண உதவிதொகைகள்/ மானியங்கள் (₹13,783.68 கோடி) மற்றும் பிற வருவாய் உதவித்தொகை (₹12,688.46 கோடி) ஆகியவற்றை குறிக்கின்றன.

## 5.5 பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஆதாயம்

### 5.5.1 பொதுத்துறை நிறுவனங்கள் ஈட்டிய இலாபம்

2021-22ம் ஆண்டில் இலாபம் ஈட்டிய 43 பொதுத்துறை நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், 2022-23ம் ஆண்டில் 95 பொதுத்துறை நிறுவனங்களில் (இரண்டு செயல்படாத பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் முதல் கணக்குகள் வரப்பெறாத ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் நீங்கலாக)

கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி 54 நிறுவனங்கள் இலாபம் ஈட்டியுள்ளன. இலாபம் 2021-22ம் ஆண்டில் ₹1,721.03 கோடியிலிருந்து 2022-23ம் ஆண்டில் ₹2,560.42 கோடியாக அதிகரித்துள்ளது. 2021-22ம் ஆண்டில் இலாபம் ஈட்டிய 43 நிறுவனங்களில், பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் 10.77 விழுக்காட்டிலிரு 2022-23ம் ஆண்டில் 54 நிறுவனங்களில் 13.15 விழுக்காடாக அதிகரித்துள்ளது. 2022-23ம் ஆண்டில் 95 பொதுத்துறை நிறுவனங்களில் (35 நட்டம் அடைந்த நிறுவனங்கள் உட்பட) பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் (-) 0.09 விழுக்காடாக இருந்தது.

அதிக இலாபம் ஈட்டிய முதல் மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் விவரங்கள் கீழ் கண்ட **அட்டவணை 5.4**ல் தரப்பட்டுள்ளன:

அட்டவணை 5.4: அதிக இலாபம் ஈட்டிய மூன்று பொதுத்துறை நிறுவனங்கள்

| பொதுத்துறை நிறுவனத்தின் பெயர் | ஈட்டிய நிகர இலாபம் (₹கோடியில்) | அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் இலாபத்தில் விழுக்காடு |
|---|---|---|
| தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் | 1,017.17 | 39.73 |
| தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் | 387.87 | 15.14 |
| தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 228.79 | 8.94 |
| **மொத்தம்** | **1,633.83** | **63.81** |

*ஆதாரம்: கடைசியாக இறுதி செய்யப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள்.*

2022-23ம் ஆண்டில், இந்த மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் நிகர இலாபமான ₹1,633.83 கோடி, மொத்த இலாபத்தில் 63.81 விழுக்காடாக இருந்தது.

### 5.5.2 ஆதாயப்பங்கை செலுத்துதல்

தமிழ்நாடு அரசுக்கு பொதுத்துறை நிறுவனங்கள் செலுத்திய ஆதாயப்பங்கின் விவரம் கீழ் கண்ட **அட்டவணை 5.5ல்** தரப்பட்டுள்ளது:

அட்டவணை 5.5: ஆதாயப் பங்கை செலுத்திய பொதுத்துறை நிறுவனங்கள்

(₹கோடியில்)

| ஆண்டு | ஆதாயப்பங்கை அறிவித்த பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | உட்செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | நிகர இலாபம் | அறிவிக்கப்பட்ட ஆதாயப்பங்கு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 2019-20 | 14 | 2,372.27 | 716.53 | 221.63 |
| 2021-22 | 14 | 2,808.74 | 681.50 | 295.22 |
| 2022-23 | 17 | 3,808.86 | 1,150.68 | 311.21 |

*ஆதாரம்: கடைசியாக இறுதி செய்யப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள்*

14 பொதுத்துறை நிறுவனங்கள் 2019-20 மற்றும் 2020-21ம் ஆண்டுகளில் ஆதாயப் பங்கை அறிவித்தற்கு எதிராக 2022-23ம் ஆண்டில் 17 பொதுத்துறை நிறுவனங்கள் ஆதாயப் பங்கை அறிவித்துள்ளன.

மின்துறையிலுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் ஆதாயப்பங்கை அறிவிக்கவில்லை/ செலுத்தவில்லை..

## 5.6 கடன்களை திருப்பி செலுத்துதல்

### 5.6.1 கடன் மீதான வட்டி பரப்பு விகிதம்

கடன் மீதான வட்டி பரப்பு விகிதம் (ICR) ஒரு நிறுவனத்தின் கடன் நிலுவை தொகைக்கு வட்டி செலுத்தும் திறனை தீர்மானிக்கப் பயன்படுகிறது. மேலும் இது நிறுவனத்தின் வட்டி மற்றும் வரிகளுக்கு முன் உள்ள வருவாயை (EBIT) வட்டி செலவினங்களால் வகுத்து கணக்கிடப்படுகிறது. குறைந்த விகித அளவு ஒரு நிறுவனத்தின் கடனுக்கு வட்டி செலுத்தும் திறன் குறைவாக உள்ளதைக் குறிக்கிறது. வட்டி பரப்பு விகிதம் ஒன்றுக்கு கீழ் இருப்பின் நிறுவனம் வட்டி செலவுகளை பூர்த்தி செய்ய போதுமான வருவாயை ஈட்டவில்லை என்பதைக் குறிக்கிறது. வட்டி சுமையுள்ள 37 பொதுத்துறை நிறுவனங்களில் கடன் மீதான வட்டி பரப்பு விகிதம் குறித்த விவரங்கள் **அட்டவணை 5.6ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.6: பொதுத்துறை நிறுவனங்களின் வட்டி பரப்பு விகிதம்**

| விவரங்கள் | ICR>=1 கொண்ட பொதுத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | | | ICR<1 கொண்ட பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | வட்டி | வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னுள்ள வருவாய் | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | வட்டி | வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னுள்ள வருவாய் |
| | | (₹ கோடியில்) | | | (₹ கோடியில்) | |
| பொதுத்துறை நிறுவனங்கள் | 20 | 1,280.56 | 2,690.81 | 17 | 17,191.04 | 1,182.65 |
| **மொத்தம்** | **20** | **1,280.56** | **2,690.81** | **17** | **17,191.04** | **1,182.65** |

*ஆதாரம்: கடைசியாக இறுதி செய்யப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள்.*

கடன் பொறுப்புகள் கொண்ட 20 பொதுத்துறை நிறுவனங்கள் (ஒரு சட்டமுறை கழகம் உட்பட) ஒன்று மற்றும் ஒன்றுக்கும் மேலான வட்டி பரப்பு விகிதத்தை கொண்டு இருந்தன. இது அவை வட்டி செலவை ஈடுகட்ட போதிய வருமானத்தை கொண்டிருந்ததை காட்டுகிறது அதுபோல, 17 பொதுத்துறை நிறுவனங்கள் ஒன்றுக்கும் கீழான வட்டிபரப்பு விகிதத்தை கொண்டுள்ளன. இது இந்த நிறுவனங்கள் வட்டிச் செலவை ஈடுகட்ட போதிய வருமானத்தை பெருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது.

## 5.7 பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு

### 5.7.1 பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட ஆதாயம் (ROCE)

பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட ஆதாயம் (ROCE) என்பது ஒரு நிறுவனத்தின் இலாபத்தையும் மற்றும் அதன் செயல்திறனையும் அதில் பயன்படுததப்பட்ட மூலதனத்துடன் அளவிடும் விகிதமாகும்.

பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட ஆதாயம் என்பது ஒரு நிறுவனத்தின் வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னுள்ள வருவாயை (EBIT) பயன்படுத்தப்பட்ட மூலதனத்தால்[6] வகுத்து கணக்கிடப்படுகிறது. 2020-21 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் ஒருங்கிணைந்த பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட ஆதாயம் **அட்டவணை 5.7ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.7: பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட ஆதாயம்**

| ஆண்டு | வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னுள்ள வருவாய் (₹ கோடியில்) | பயன்படுத்தப்பட்ட மூலதனம் (₹ கோடியில்) | பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட ஆதாயம் (விழுக்காட்டில்) |
|---|---|---|---|
| **2020-21** | (-) 4,301.19 | 21,646.31 | *(-) 19.87* |
| **2021-22** | (-) 1,131.29 | 11,304.11 | *(-)10.01* |
| **2022-23** | **6,840.83** | **6,364.64** | ***107.48*** |

*ஆதாரம்: கடைசியாக இறுதி செய்யப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள்*

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழககங்களின் மோசமான நிதி செயல்பாட்டின் காரணமாக 2020-21ம் ஆண்டில் வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னுள்ள வருவாய் (EBIT) எதிர்மறையாக இருந்தது. வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னுள்ள வருவாய் 2021-22ல் (எதிர்மறையாக இருந்த போதிலும்) சற்று முன்னேற்றம் ஏற்பட்டு பின்னர் செப்டம்பர் 2022 முதல் திருத்தப்பட்ட மின் கட்டனம் அமல்படுத்தப்பட்டதனால், 2022-23ம் ஆண்டில் வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னுள்ள வருவாயில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டு நேர்மறையாக மாறியது.. 2020-21 முதல் தொடர்ச்சியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் திரண்ட இழப்புகள் அதிகரித்ததின் மூலம் உட்செலுத்தப்பட்ட மூலதனம் குறைந்தது. இதன் காரணமாக, பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட ஆதாயம் 2022-23ம் ஆண்டு முதல் நேர்மறையானது.

### 5.7.2 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குமூலதனத்தின் மீதான வருவாய் (ROE)

நிறுவனத்தின் சொத்துக்களை, இலாபம் ஈட்டுவதற்கு திறன்பட பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை மதிப்பிடுவதற்கான நிதி செயல்திறனின் ஒரு அளவுகோல் பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் (Return on Equity - ROE) என்பதாகும். ஒரு நிறுவனத்தின் பங்குமூலதனத்தின் மீதான வருவாய் (ROE) என்பது நிகர வருமானத்தை (வரிகள் கழித்த நிகர இலாபம்) பங்குதாரர்களின் நிதியால் வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது. இது ஒரு விழுக்காடாக குறிப்பிடப்படுகிறது மற்றும் நிகர வருமானம் மற்றும் பங்குதாரர்களின் நிதி இரண்டும் ஒரு நிறுவனத்தில் நேர்மறையான எண்ணிக்கையில் இருந்தால் மட்டுமே கணக்கிட முடியும்.

---

6 பயன்படுத்தப்பட்ட மூலதனம் = செலுத்தப்பட்ட மூலதனம் + சேம நிதி மற்றும் உபரிகள் + நீண்ட கால கடன்கள் – திரண்ட இழப்புகள் – ஒத்திவைக்கப்பட்ட வருவாய் செலவினங்கள்.

ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்களின் நிதியைக் கணக்கிட, செலுத்தப்பட்ட மூலதனத்துடன் சேம நிதி மற்றும் உபரிகளை கூட்ட அவற்றிலிருந்து திரண்ட இழப்புகள் மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வருவாய் செலவினங்களை (Deferred Revenue Expenditure) கழித்துக் கணக்கிடப்படுகின்றது. அனைத்து சொத்துக்களும் விற்கப்பட்டு மற்றும் அனைத்து கடன்களும் செலுத்தப்பட்ட நிலையில், ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு எவ்வளவு மீதமாகும் என்பதையே இது வெளிப்படுத்துகிறது. ஒரு நேர்மறையான பங்குதாரர்களின் நிதி என்பது நிறுவனம் அதன் பொறுப்புகளை ஈடுகட்ட போதுமான சொத்துக்களைக் கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது, அதே நேரத்தில் எதிர்மறையான பங்குதாரர்களின் நிதி, பொறுப்புகள் சொத்துக்களின் மதிப்புக்கு மிகையாக உள்ளது என்பதை குறிக்கிறது.

2020-21 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் பொதுத்துறை நிறுவனங்களின் ஒருங்கிணைந்த பங்குமூலதனத்தின் மீதான வருவாயின் மூலம் வரிகளுக்கு பிந்தைய நிகர இலாபம் மற்றும் பங்குதாரர்களின் நிதி எதிர்மறையாக உள்ளதை காட்டுகின்றது. இதன்மூலம், மூன்று ஆண்டுகளில் எந்தவொரு வருவாயும் கிடைக்கப் பெறவில்லை என்பது தெளிவாகிறது.

## 5.8 பொதுத்துறை நிறுவனங்களில் ஏற்பட்ட இழப்புகள்

### 5.8.1 ஏற்பட்ட இழப்புகள்

மார்ச் 2023 அன்று, கடைசியாக இறுதி செய்யப்பட கணக்குகளின்படி 35 பொதுத்துறை நிறுவனங்களில்[7] இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பொதுத்துறை நிறுவனங்களில் 2020-21ம் ஆண்டில் ஏற்பட்ட இழப்புகள் ₹25,542.52 கோடியிலிருந்து 2022-23ம் ஆண்டில் ₹16,047.99 கோடியாக குறைந்துள்ளது. இந்த விவரங்கள் கீழ்கூறிய **அட்டவணை 5.8ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.8: 2020-21 முதல் 2022-23 வரையிலான ஆண்டுகளில் இழப்பு ஏற்பட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை**

(₹ கோடியில்)

| ஆண்டு | இழப்பை சந்தித்த பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | நடப்பாண்டின் நிகர இழப்பு | திரண்ட இழப்பு | நிகர மதிப்பு[8] |
|---|---|---|---|---|
| 2020-21 | 33 | 25,542.52 | 1,64,785.03 | (-)1,05,425.53 |
| 2021-22 | 34 | 22,232.33 | 1,83,123.14 | (-)1,25,300.27 |
| 2022-23 | 35 | 16,047.99 | 2,26,051.29 | (-)1,67,419.82 |

7 இரண்டு செயல்படாத பொதுத்துறை நிறுவனங்கள் நீங்கலாக.

8 நிகர மதிப்பு என்பது செலுத்தப்பட்ட மூலதனத்துடன் உபரி மற்றும் இருப்பு, திரண்ட இழப்புகள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருவாய்ச் செலவுகளை கழித்ததன் மொத்தமாகும். இருப்பு என்பது இதுவரை ஈட்டிய மொத்த இலாபம் மற்றும் மூதலீட்டு முன்னுரிமைக் கணக்கை உள்ளடக்கியது. இதில் சொத்து மறுமதிப்பீடு மூலம் கிடைக்கப்பெற்ற ஆதாயம் மற்றும் தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றின் மூலம் ஏற்பட்ட இருப்புகள் உள்ளடங்காது.

31 மார்ச் 2023 அன்று, மாநில அரசு பங்கு மூலதனமாக ₹32,583.71 கோடி முதலீட்டை, நட்டத்தை சந்தித்துள்ள இந்த 35 பொதுத்துறை நிறுவனங்களில் எந்தவொரு ஆதாயப் பங்கும் பெறாமல் முதலீடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2022-23–ம் ஆண்டில், 35 பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த இழப்பான ₹16,047.99 கோடியில், ₹9,847.75 கோடி இழப்பை எரிசக்தி துறையிலுள்ள இரண்டு பொதுத்துறை நிறுவனங்களால்[9] மற்றும் ₹6,077.86 கோடி போக்குவரத்து துறையிலுள்ள எட்டு பொதுத்துறை நிறுவனங்களால்[10] ஏற்பட்டது. 2022-23–ம் ஆண்டில் நட்டத்தை சந்தித்துள்ள இந்த 35 பொதுத்துறை நிறுவனங்களில், 31 நிறுவனங்களில் ₹2,26,184.21 கோடி திரண்ட இழப்புகள் மற்றும் நான்கு பொதுத்துறை நிறுவனங்களில்[11] திரண்ட இலாபம் ₹132.92 கோடி என ஒட்டு மொத்தம் திரண்ட இழப்புகள் ₹2,26,051.29 கோடியாக இருந்தது. திரண்ட இழப்புகளை கொண்டிருந்த இந்த 31 பொதுத்துறை நிறுவனங்களில், 21 பொதுத்துறை நிறுவனங்களின் நிகர மதிப்பு மொத்தமும் தேய்ந்து காணப்பட்டது.

### 5.8.2 பொதுத்துறை நிறுவனங்களின் முதலீடு தேய்தல்

31 மார்ச் 2023 அன்று, 39 பொதுத்துறை நிறுவனங்களின் திரண்ட இழப்பு ₹2,26,542.53 கோடியாக இருந்தது (2022-23ல் நட்டத்தை சந்தித்த மற்றும் பத்தி 5.8.1 கூறியபடி திரண்ட இழப்புகளை கொண்ட 31 பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இலாபம் ஈட்டிய ஆனால் திரண்ட இழப்புகளை கொண்ட எட்டு பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட). இந்த 39 பொதுத்துறை நிறுவனங்களில், 31 பொதுத்துறை நிறுவனங்களில் ₹16,016.09 கோடி நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும், எட்டு பொதுத்துறை நிறுவனங்கள் ₹358.32 கோடி திரண்ட இழப்பை கொண்டிருந்தாலும், கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி நட்டத்தை சந்திக்கவில்லை.

39 பொதுத்துறை நிறுவனங்களில் 23 பொதுத்துறை நிறுவனங்களின் நிகர மதிப்பு திரண்ட இழப்பால் முற்றிலும் அழிக்கப்பட்டது மற்றும் அவற்றின் நிகர மதிப்பு எதிர்மறையாக இருந்தது. இதன் விவரங்கள் **இணைப்பு 5.2ல்** தரப்பட்டுள்ளன. 31 மார்ச் 2023 அன்று, இந்த 23 பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மூலதனம் ₹33,263.46 கோடிக்கு எதிராக அவற்றின் நிகர மதிப்பு (–)₹1,93,132.99 கோடியாக இருந்தது. பங்கு மூலதனம் தேய்ந்த

9 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்

10 மாநகர போக்குவரத்துக் கழகம், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்), தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்), ,தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்), தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்), தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) .

11 அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், IT விரைவு வழிச்சாலை, தமிழ்நாடு கைவினைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்.

(எதிர்மறை நிகர மதிப்பு) அனைத்து 23 பொதுத்துறை நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்கள்[12] 2022-23–ம் ஆண்டில் ₹25.57 கோடி இலாபம் ஈட்டின.

நிகர மதிப்பு தேய்ந்த 23 பொதுத்துறை நிறுவனங்களில் இரண்டு மின்துறை நிறுவனங்கள் மற்றும் 21 மின்துறை அல்லாத நிறுவனங்களும் அடங்கும். கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி இரண்டு பொதுத்துறை மின் நிறுவனங்களில் ₹84,290.71 கோடி செயல்பாட்டு இலாபத்திற்கு எதிராக ₹95,878.96 கோடி செயல்பாட்டு செலவினங்கள் ஏற்பட்டது. 21 மின்துறை அல்லாத பொதுத்துறை நிறுவனங்களில், ₹39,573.58 கோடி செயல்பாட்டு இலாபத்திற்கு எதிராக ₹48,247.51 கோடி செயல்பாடு செலவினங்கள் ஏற்பட்டது. ஆக மொத்தம், இந்த நிகர மதிப்பு தேய்ந்த 23 பொதுத்துறை நிறுவனங்களில்[13] ₹1,23,864.29 கோடி செயல்பாட்டு இலாபத்திற்கு எதிராக ₹1,44,126.47 கோடி செயல்பாட்டு செலவினங்கள் ஏற்பட்டது. 2022-23ம் ஆண்டில் மாநில அரசு ஒரு மின்துறை நிறுவனம் (தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்) மற்றும் ஒன்பது மின்துறை அல்லாத பொதுத்துறை நிறுவனங்களுக்கு (போக்குவரத்துத்துறையிலுள்ள எட்டு பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) முறையே ₹26,472.14 கோடி மற்றும் ₹2,945.01 கோடி வரவு செலவு திட்டத்தின் கீழ் மானியங்களாக/ உதவித்தொகைகளாக அளித்தது குறிப்பிடத்தக்கது.

இந்த 23 பொதுத்துறை நிறுவனங்களில் 22 நிறுவனங்கள் 2022-23 ஆண்டிற்கான கணக்குகளை இறுதி செய்திருந்தன. ஒரே ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் கணக்குகள் மட்டும் ஒரு வருடமாக நிலுவையில் இருந்தது.

## 5.9 பொதுத்துறை நிறுவனங்களின் தணிக்கை

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 139(5) மற்றும் (7)ன் கீழ் ஒரு அரசு நிறுவனம் மற்றும் அரசு கட்டுப்பாட்டில் உள்ள பிற நிறுவனத்தின் சட்டமுறை தணிக்கையாளர்களை இந்திய தணிக்கைத் தலைவர் நியமிக்கிறார். இந்திய தணிக்கைத் தலைவர் கூடுதல் தணிக்கை நடத்த மற்றும் சட்ட முறை தணிக்கையாளர் தணிக்கை அறிக்கை மீது கூடுதலாக கருத்துகளை வெளியிட உரிமை உண்டு. சில கழகங்களை நிர்வகிக்கும் சட்டங்கள், அதன் கணக்குகளை இந்திய தணிக்கைத் தலைவர் தணிக்கை செய்து மாநில சட்டமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுகிறது.

[12] பெரம்பலூர் சர்க்கரை நிறுவனம் மற்றும் பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு

[13] நிகர மதிப்பு தேய்ந்த பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்புகள்/நிர்வாகச் செலவினங்கள் செயல்பாட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற வரவுகள், வங்கிகளிடம் நடப்பு மூலதனத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் ஏனையவைகளால் ஈடு செய்யப்பட்டன.

## 5.10 பொதுத்துறை நிறுவனங்களின் சட்ட முறை தணிக்கையாளர்களை – இந்திய தணிக்கைத் தலைவர் நியமித்தல்

நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 139 (5)ன் படி, ஒரு அரசு நிறுவனம் அல்லது அரசு கட்டுப்பாட்டில் உள்ள பிற நிறுவனத்தின் சட்டமுறை தணிக்கையாளர்கள் நிதியாண்டின் தொடக்கத்தில் இருந்து 180 நாட்களுக்குள் இந்திய தணிக்கைத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டும்.

2022-23ம் ஆண்டிற்கான அத்தகைய நிறுவனங்களின் சட்ட முறை தணிக்கையாளர்கள் செப்டம்பர் 2022 முதல் இந்திய தணிக்கைத் தலைவரால் நியமிக்கப்பட்டனர்.

## 5.11 பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளை சமர்ப்பித்தல்

### 5.11.1 காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம்

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 394ன்படி, ஒரு அரசு நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் விவகாரங்கள் குறித்த ஆண்டறிக்கை அதன் வருடாந்திர பொதுக் கூட்டம்[14] முடிந்த மூன்று மாதத்திற்குள் தயாரிக்கப்பட வேண்டும். அதன் பிறகு விரைவில் ஆண்டறிக்கையுடன் தணிக்கை அறிக்கையின் நகல் மற்றும் தணிக்கை அறிக்கையின் மீதான குறிப்புகள் இந்திய தணிக்கைத் தலைவரின் கருத்துக்கள் மாநில சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும். சட்டமுறை கழகங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டத்திலும் கிட்டத்தட்ட இதே போன்ற விதிகள் உள்ளன. இந்த வழிமுறை, மாநில அரசு தொகுப்பு நிதியிலிருந்து நிறுவனங்களில் முதலீடு செய்யப்படும் பொது நிதியைப் பயன்படுத்துவதற்கான தேவையான கட்டுப்பாட்டை சட்டமன்றத்திற்கு வழங்குகிறது.

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 96ன்படி ஒவ்வொரு நிறுவனமும், ஆண்டிற்கு ஒரு முறை பங்குதாரர்கள் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தை நடத்த வேண்டும். ஒரு வருடாந்திர பொதுக்குழு கூட்ட தேதிக்கும் அடுத்த வருடாந்திர பொதுக்குழு கூட்ட தேதிக்கும் இடையில் 15 மாதங்களுக்கு மேல் இடைவெளி இருக்கக் கூடாது என்றும் கூறுகிறது. மேலும், நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 129, நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையை மேற்கூறிய வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் அவர்களின் பரிசீலனைக்காக வைக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 129ன் விதிகளுக்கு இணங்காததற்கு பொறுப்பான நபர்கள் மற்றும் நிறுவனத்தின் இயக்குனர்களுக்கு,

---

[14] முதல் பொதுக்குழு கூட்டம், நிறுவனத்தின் முதல் நிதி ஆண்டு முடிவடைந்த ஒன்பது மாதத்திற்குள் நடத்த வேண்டும் மற்றும் நிதி ஆண்டு முடிவடைந்த ஆறு மாதத்திற்குள் அதாவது 30 செப்டம்பருக்குள் மற்ற வருடாந்திற பொதுக்குழு கூட்டம் நடத்த வேண்டும்.

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 129(7)ன்படி அபராதம் மற்றும் சிறை தண்டனை விதிக்கவும் வகை செய்கிறது.

நிலுவையில் இருந்த பொதுத்துறை நிறுவனங்களின் வருடாந்திர கணக்குகள் பின்வரும் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளன.

### 5.11.2 பொதுத்துறை நிறுவனங்கள் கணக்குக்களை காலக்கெடுவிற்குள் சமர்ப்பித்தல்

31 மார்ச் 2023 நிலவரப்படி 102 பொதுத்துறை நிறுவனங்கள் (ஒரு சட்டமுறை கழகம் உட்பட) இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கையின் கீழ் இருந்தன. இவற்றுள்,. 100 பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து (இரண்டு செயல்படாத நிறுவனங்கள் தவிர்த்து) 2022-23ம் ஆண்டுக்கான கணக்குகள் பெறப்பட வேண்டும். ஆனால், 91 பொதுத்துறை நிறுவனங்கள், 31 டிசம்பர் 2023-க்குள் இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கைக்கு தங்கள் கணக்குகளை (முந்தைய ஆண்டுக்கான கணக்குகள் உட்பட) சமர்ப்பித்தன. பல்வேறு காரணங்களுக்காக 16 பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள் நிலுவையில் இருந்தன. பொதுத்துறை நிறுவனங்கள் கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் நிலுவைகள் பற்றிய விவரங்கள் கீழே உள்ள **அட்டவணை 5.9ல்** கொடுக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 5.9: கணக்குகளை சமர்ப்பிப்பதில் உள்ள நிலுவை பற்றிய விவரங்கள்**

| வ. . எண் | விவரங்கள் | | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 31.03.2023 அன்று இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கையின் கீழுள்ள மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | | 102 |
| 2 | கழிக்க: பெற வேண்டியதற்ற 2022-23 ஆம் ஆண்டுக்கான புதிய நிறுவனங்களின் கணக்குகள் | | 00 |
| 3 | 2022-23–ம் ஆண்டின் கணக்குகள் பெற வேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கை | | 100[15] |
| 4 | 2022-23-ம் ஆண்டுக்கான கணக்குகளை 31 டிசம்பர் 2023–க்குள் இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கைக்காக வழங்கிய நிறுவனங்களின் எண்ணிக்கை | | 84[16] |
| 5 | கணக்கு நிலுவையிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை (16 பொதுத்துறை நிறுவனங்கள்) | | 22 |
| 6 | நிலுவைகள் வகை | (i) கலைப்பின் கீழ் | 0 |
| | | (ii) செயல்படாத | 0 |
| | | (iii) மற்றவை | 22 |
| 7 | மற்றவை' பிரிவிலுள்ள நிலுவைகளின் ஆண்டு வாரியான பகுப்பாய்வு | (i) ஒரு ஆண்டு (2022-23) | 11 |
| | | (ii) இரண்டு ஆண்டுகள் (2021-22 மற்றும் 2022-23) | 8 |
| | | (iii) மூன்று ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் | 3 |

15 இரண்டு செயல்படாத நிறுவனங்கள் நீங்கலாக

16 இந்திய தணிக்கைத் தலைவரால் சான்றிதழ் வழங்கப்பட்ட 2022-23-ற்கான கணக்குகளை குறிக்கும்.

மாநில அரசு கணக்குகள் நிலுவையில் உள்ள மற்றும் அதனால் கணக்குகளை இறுதி செய்யாத இந்த பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு மூலதனம் மற்றும் கடன்கள் வடிவில் முதலீடு செய்துள்ளது, இதன் காரணமாக, அரசு முதலீடுகள் தணிக்கை மற்றும் தணிக்கையின் மேற்பார்வை மற்றும் மாநில சட்டமன்றத்தின் கண்காணிப்பிற்கு வெளியே இருக்கும் நிலைக்கு வழிவகுக்கும். அதன் மூலம் அவர்களை மோசடி மற்றும் முறைகேடு நிகழ்வுகளுக்கு மிகவும் எளிதில் ஆளாக்குகிறது.

## 5.12 இந்திய தணிக்கைத் தலைவரின் மேற்பார்வை – கணக்குகளின் தணிக்கை மற்றும் கூடுதல் தணிக்கை

### 5.12.1 நிதி அறிக்கையிடல் கட்டமைப்பு

நிறுவனங்கள், மத்திய அரசு கணக்கியல் தரநிலைகள் பற்றிய தேசிய ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து பரிந்துரைத்த கணக்கியல் தரநிலைகளை பின்பற்றியும் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013, பட்டியல் IIIல் வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி அறிக்கைகளை தயாரிக்க வேண்டும். சட்டமுறை நிறுவனங்கள், இந்திய தணிக்கைத் தலைவருடன் கலந்தாலோசித்து ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடியும் மற்றும் அத்தகைய நிறுவனங்களை நிர்வகிக்கும் சட்டத்தில் உள்ள கணக்குகள் தொடர்பான குறிப்பிட்ட விதிகள் ஆகியவற்றை பின்பற்றி கணக்குகளை தயாரிக்க வேண்டும்.

### 5.12.2 அரசு நிறுவனங்களின் கணக்குகளை சட்டமுறை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்தல்

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 139ன் கீழ் இந்திய தணிக்கைத் தலைவரால் நியமிக்கப்பட்ட சட்டமுறை தணிக்கையாளர்கள், அரசு நிறுவனங்களின் கணக்குகளின் தணிக்கையை நடத்தி, 2013ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 143ன் படி அறிக்கையை சமர்ப்பிக்கின்றனர்.

பொதுத்துறை நிறுவனங்களின் தணிக்கையில் சட்டமுறை தணிக்கையாளர்கள் ஒதுக்கப்பட்ட பணிகளை முறையாகவும் திறம்படவும் நிறைவேற்றவேண்டும் என்ற ஒட்டுமொத்த நோக்கத்துடன் அவர்களின் செயல்திறனை கண்காணிப்பதன் மூலம் இந்திய தணிக்கைத் தலைவர் ஒரு மேற்பார்வை பங்கை வகிக்கிறார். இந்த பணி கீழ்கண்ட அதிகாரத்தை கொண்டு செயல்படுத்தப்படுகிறது:

- நிறுவனங்கள் சட்டம் 2013, 143(5)ம் பிரிவின் கீழ் சட்டமுறை தணிக்கையாளர்களுக்கு பணிப்புரைகளை வழங்குதல்; மற்றும்
- நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 143(6)ன் கீழ் சட்டமுறை தணிக்கையாளரின் அறிக்கை மீது கூடுதல் தணிக்கைக் குறிப்புகளை வழங்குதல்.

### 5.12.3 அரசு நிறுவனங்களின் கணக்குகளின் மீது கூடுதல் தணிக்கை

நிறுவனங்கள் சட்டம், 2013 அல்லது ஏனைய தொடர்புடைய சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிதி அறிக்கையிடல் கட்டமைப்பின்படி நிதி

அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான முதன்மை பொறுப்பு ஒரு நிறுவனத்தின் நிர்வாகத்தினுடையதாகும்.

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 139ன் கீழ் இந்திய தணிக்கைத் தலைவரால் நியமிக்கப்பட்ட சட்டமுறை தணிக்கையாளர்கள், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICAI) நிலையான தணிக்கை நடைமுறைகள் மற்றும் இந்திய தணிக்கைத் தலைவர் வழங்கிய வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஒரு சுதந்திரமான தணிக்கையின் அடிப்படையில் நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 143ன் கீழ் நிதி அறிக்கைகள் மீது கருத்தை வெளிப்படுத்துவதற்கு பொறுப்புள்ளவராக உள்ளனர். சட்டமுறை தணிக்கையாளர்கள் நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 143ன் கீழ் தணிக்கை அறிக்கையை இந்திய தணிக்கைத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு நிறுவனங்களின் சான்றளிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் சட்டமுறை தணிக்கையாளர்களின் அறிக்கைள், இந்திய தணிக்கைத் தலைவரால் கூடுதல் தணிக்கை மூலம் மறு ஆய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய மதிப்பாய்வின் அடிப்படையில், குறிப்பிடத்தக்க தணிக்கைக் குறிப்புகள், ஏதேனும் இருப்பின், நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 143(6)ன் கீழ் வருடாந்திர பொதுக்குழுவின் முன் அவை வைக்கப்பட வேண்டும்.

## 5.13 இந்திய தணிக்கைத் தலைவரின் மேற்பார்வை பொறுப்பின் முடிவுகள்

### 5.13.1 நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 143-ன் கீழ் அரசு நிறுவனங்களின் கணக்குகளின் தணிக்கை

31 டிசம்பர் 2023ற்குள், 91 பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து (ஒரு சட்டமுறை கழகம் உட்பட) 2022-23ம் ஆண்டிற்கான மற்றும் முந்தைய ஆண்டுகளுக்கான நிதி அறிக்கைகள் பெறப்பட்டன. இவற்றில், 59 பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள் இந்திய தணிக்கைத் தலைவரால் கூடுதல் தணிக்கைக்கு உடப்டுத்தப்பட்டது. கூடுதல் தணிக்கைக்கு தேர்ந்தெடுக்கப்படாத 27 பொதுத்துறை நிறுவனங்களுக்கு அதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது மற்றும் ஐந்து நிறுவனங்களின் கணக்குகள் மீதான தணிக்கை நடைபெற்றுவருகின்றது. மதிப்பாய்வின் முடிவுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### 5.13.2 திருத்தியமைக்கப்பட்ட தணிக்கையாளர்களின் அறிக்கைகள்

இந்திய தணிக்கைத் தலைவர் நடத்திய நிதிநிலை அறிக்கைகளின் மீதான கூடுதல் தணிக்கையின் விளைவாக, சட்டமுறை தணிக்கையாளர்கள் எட்டு பொதுத்துறை நிறுவனங்களின் நிதி அறிக்கைகளை திருத்தியமைத்தனர்.

### 5.13.3 பொதுத்துறை நிறுவனங்கள் குறித்த சட்டமுறை தணிக்கையாளர்களின் அறிக்கைகளுக்கு கூடுதலாக வெளியிடப்பட்ட இந்திய தணிக்கைத் தலைவரின் குறிப்பிடத்தக்க கருத்துரைகள்

2022-23ம் ஆண்டிற்கான மற்றும் முந்தைய ஆண்டிற்கான நிதி அறிக்கைகளை சட்டமுறை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்த பின்னர், இந்திய தணிக்கைத் தலைவரால் 59 பொதுத்துறை நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் 31 டிசம்பர் 2023ற்குள் கூடுதல் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன.

மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் குறித்து வழங்கப்பட்ட கருத்துரைகளால், இலாபத்தில் நிதி தாக்கம் ₹393.52 கோடியாக இருந்தது.

## 5.14 மேலாண்மை கடிதங்கள்

நிதித் தணிக்கையின் நோக்கங்களில் ஒன்று, தணிக்கையாளர்களுக்கும் பெருநிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பிலிருப்பவர்களுக்கும் இடையிலான நிதி அறிக்கைகளின் தணிக்கையிலிருந்து எழும் விவரங்களுக்காக ஒரு தகவல் தொடர்பை நிறுவுவதாகும்.

பொதுத்துறை நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் குறித்த முக்கிய குறிப்புகள், நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 143 (5)ன் கீழ் இந்திய தணிக்கைத் தலைவரின் கருத்துக்களாக அறிக்கையளிக்கப்படுகின்றது. இந்த கருத்துக்கள் தவிர, நிதி அறிக்கைகள் அல்லது அறிக்கை அளிக்கும் செயல்பாட்டில் இந்திய தணிக்கைத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்ட முறைகேடுகள் அல்லது குறைபாடுகள், அவற்றை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக நிறுவன மேலாண்மைக்கு "மேலாண்மை கடிதம்" மூலம் தெரிவிக்கப்படுகின்றது. நடப்பாண்டில், 27 பொதுத்துறை நிறுவனங்களுக்கு கணக்கியல் கொள்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள், கணக்கியல் தரநிலைகளை சரியாக கடைபிடிக்க தவறியமை, சுட்டிக்காட்டிய குறைபாடுகள் மீதுநடவடிக்கை எடுக்கப்படும் என உத்திரவாதம் அளித்தும் அதன் மீது நிர்வாகம் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியமை ஆகியவை குறித்து இந்திய தணிக்கைத் தலைவரால் "மேலாண்மை கடிதங்கள்" வழங்கப்பட்டது

## 5.15 முடிவுரை

இந்த அத்தியாயம் பல்வேறு விகிதங்களின் அடிப்படையில் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி செயல்திறனை அளவிட்டு, அவற்றின் செயல்பாட்டு திறன் மற்றும் முதலீடுகளின் மீதான வருவாய் குறித்து தெரிவிக்கிறது. மேலும், இந்த அத்தியாயம், சட்டமுறை தணிக்கையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சரியாகவும் மற்றும் திறமையாகவும் செயல்படுத்துகிறார்களா என்ற ஒட்டுமொத்த நோக்கத்துடன் அவர்களின்


செயல்திறனை கண்காணித்தல் தொடர்பான இந்திய தணிக்கைத் தலைவரின் மேற்பார்வைப் பங்கைத் தெரிவிக்கிறது.

- 31 மார்ச் 2023 நிலவரப்படி ஒரு சட்டமுறை கழகம் உட்பட 102 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு நிறுவனங்கள் செயல்படாதவையாகும்.
- மொத்த ₹2,560.42 கோடி இலாபத்தில், மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்பு மட்டுமே 63.81 விழுக்காடாக இருந்தது. 35 பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த நட்டம் ₹16,047.99 கோடியில், ₹15,926.60 கோடி நட்டம் மூன்று மின்துறை மற்றும் எட்டு போக்குவரத்துத் துறை நிறுவனங்களின் மூலம் ஏற்பட்டது.
- 39 பொதுத்துறை நிறுவனங்களில் ஒட்டுமொத்தமாக, ₹2,26,542.53 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதை பகுப்பாய்வின் மூலம் தெரிய வந்தது மற்றும் இந்த 39 பொதுத்துறை நிறுவனங்களில், 23 பொதுத்துறை நிறுவனங்களின் நிகர மதிப்பானது திரண்ட இழப்பினால் முற்றிலும் அழிக்கப்பட்டு, அவற்றின் நிகர மதிப்பு எதிர்மறையாக இருப்பதையும் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. இந்த 23 பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு முதலீடான ₹33,263.46 கோடிக்கு எதிராக நிகர மதிப்பு (-)₹1,93,132.99 கோடியாக இருந்தது.
- 2022-23–ல் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிலும் நிகர வருமானம் மற்றும் பங்குதாரர்களின் நிதி எதிர்மறையாக இருந்ததால் இந்த பொதுத்துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்த பங்கு மூலதனத்தின் மீதான வருவாயும் எதிர்மறையாக இருந்தது.
- நிறுவனங்கள் சட்டம், 2013ன் படி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிதிநிலை அறிக்கைகளை சமர்பிப்பதை பொதுத்துறை நிறுவனங்கள் கடைபிடிக்கவில்லை. இதன் விளைவாக, 16 பொதுத்துறை நிறுவனங்களின் 22 கணக்குகள் நிலுவையில் உள்ளன.

## 5.16 பரிந்துரைகள்

- *செயல்பாட்டுத் திறமையின்மைகளைக் கண்டறிந்து சரிசெய்வதற்கும், நட்டமடைந்து வரும் பொதுத்துறை நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளிக்க கால வரையரை நிற்ணயித்தது. ஒரு செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் ஒரு நிபுணர் குழுவை அரசு அமைக்கலாம்.*
- *மாநில அரசு நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களின் வணிக மாதிரிகளை ஆராய்ந்து, இழப்புகளுக்கான மூல காரணத்தை நிவர்த்தி செய்து, பொதுக் கருவலத்திற்கு பெரும் சுமையாக இருப்பதால், இந்த வணிக மாதிரிகளின் நிலைத்து செயல்படும் தன்மையை ஏற்படுத்துவது குறித்து ஆராயலாம்.*

- *மாநில அரசு பொதுத்துறை நிறுவனங்கள் உரிய நேரத்தில் கணக்குகளை சமர்ப்பிப்பதை உறுதி செய்யவேண்டும். அவ்வாறு செய்யாவிடில், அரசு முதலீடுகள் மாநில சட்டமன்றத்தின் மேற்பார்வையின்றி* இருக்கும் நிலைக்கு வழிவகுக்கும்.



**(சி. நெடுஞ்செழியன்)**

**சென்னை** **முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-**I),

**நாள்** 18 ***ஜூன்*** 2024 **தமிழ்நாடு**

**மேற்கையொப்பமிடப்பட்டது**



**(கிரீஷ் சந்திர முர்மூ)**

**புது தில்லி** **இந்திய தணிக்கைத் தலைவர்**

**நாள்** 27 ***ஜூன்*** 2024